
வருகிறது!
ஜூபிடரின்
கிருஷ்ண
விஜயம்
JUPITER PICTURES CIRCUIT
டைரக்ஷன் - சுந்தர் ராவ் நட்கர்னி.

ஜுபிடரின்



# கிருஷ்ணவிஜயம்

# கிருஷ்ண விஜயம் கதை சுருக்கம்

கம்ஸனும் அவனுடைய அசுரக்கும்பலும் புரிந்த அக்ரமங்களை பொருக்க மாட்டாமல் பூமாதேவி பிரும்மதேவரிடம் முறையிட அவரும் இந்திரன் முதலிய திக்கு பாலர்களுடன் திருப்பாற்கடல் போய்ச் சேர்ந்தார். அவர்களது துயரங்களைச் செவிமடுத்த ஸ்ரீ மகாவிஷ்ணு, தாம் விரைவில் தேவகி மைந்தனாய் அவதாரம் செய்து துஷ்டநிக்ரகம் புரிவதாக வாக்களித்தார்.

தேவகி—கம்ஸன் தங்கைக்கும் வசுதேவருக்கும் திருமண ஊர்வலம் விமரிசையாக நடந்தது. அப்போது, தேவகி வயிற்றில் பிறக்கப்போகும் எட்டாவது குழந்தையே கம்ஸனுக்கு எமனாக வரும் என்று வானிலிருந்து ஓர் அசரீரி கூறியது. இதைக் கேட்டதும் கம்ஸன், தன் தங்கையை வெட்டப் போக: வசுதேவர் குறுக்கிட்டு, அவள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளை அனைத்தையும் பிறந்தவுடன் கொண்டு வந்து கொடுத்து விடுவதாக வாக்களிக்கவே கம்ஸன் மனமிரங்கி, அவளைக் கொல்வதற்குப் பதிலாக கணவனுடன் சிறையிலடைத்தான் காலக்ரமத்தில் தேவகியும் ஆறு குழந்தைகளின் தாயாரானாள் தேவகியின் ஆறு குழந்தைகளையும் தன் வாளுக்கு இறையாக்கினான்.

உடனே பாகற்கடலில பள்ளிகொண்ட பரந்தாமன் வெகுண்டெழுந்தான். தேவகியின எட்டாவது குழந்தையாக தானே அவதரித்தான் பிறந்தவுடன். தன் தாய் தந்தையருக்குத் திவ்ய ரூபதரிசனம் தந்தான் உடனே வசுதேவரின் விலங்குகள் கழன்று வீழ்ந்தன சிறைக் கதவுகள் தாமே திறந்துகொண்டன காவலாளரும் மயக்கமுற்றனர் குழந்தையை ஓர் கூடையிலேந்தி சிரமேல் தாங்கிகொண்டு அர்த்த ராத்திரியில் கொட்டுகிற மழையில் கோதுலத்தை நோக்கிப் புறப்பட்டார் வசுதேவர். நந்தகோபனது அந்தப்புரத்தை யடைந்து மயக்கத்திலாழ்ந்திருந்த யசோதையின் அருகில் தன் அருமை மகவைக் கிடத்திவிட்டு அவளது பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு ஒருவருமறியாமல் திரும்பவும் சிறைக்கு வந்து சேர்ந்தார் வசுதேவர். தேவகி ஓர் பெண் மகவு பெற்றிருப்பதாக கேள்வியுற்று கொல்லும் ஆத்திரத்துடன் கம்ஸன் சிறைச்சாலைக்கு விரைந்தோடி வந்தான் ஆனால் அக்குழந்தை அவனை எட்டி உதைத்து விட்டு அவனைக்கொல்ல விருக்கும் தேவகியின் எட்டாவது மைந்தன் எற்கனவே பிறந்து விட்டான் என்று கூறி மறைந்தது குழந்தை வளர வளர கம்ஸனது மனக்கலக்கமும் வளரலாயிற்று அதைக் கொன்றோ அல்லது உயிருடனோ கொண்டு வருபவர்களுக்கு விமரிசையான பரிசளிப்பதாகக் கம்ஸன் விளம்பரப்படுத்தினான

அவர்களின் கதி என்ன. ஆயிற்று திரையில் காண்க.

# ✱ கிருஷ்ண விஜயம் பாட்டுகள் ✱

ராகம் : பூபாளம்   ரிஷிகள்   தாளம் : ஆதி

எழுவீர் உலகீர்—ஆதவன் உதயமானான் (மன)
இருளகன்று உலகெலாம் உய்ய அருள்
இறைவன் விளையாடல் கண்டு மகிழ (எழுவீர்)
நாராயண நாராயண என்றே பாராயணம் செய்யும் பக்தர்களும்
ஆரண மோதிடும் வேதியரும் நீராடும் மங்கள மடந்தையரும் (எ

## நாரதரின் முதல் ராகமாலிகை—கிருஷ்ணன் பிறப்பு

ராகம் : பிலஹரி   தாளம் : ஆதி

பொறுமைக் கடலாகிய பூமாதேவி—சுமை தாங்க முடியாமல்
புகழ் வீணை பயில் வாணி பதியின் உலகடைந்தாள்
ப்ரஹ்மன் இந்திரன் முதல் அமரருடன் திருப்பாற்கடல் சேரவும்
ராகம் : நீலாம்பரி [பூமாதா

அஸுரரெல்லாம மனிதராய்க் கம்ஸ சிசுபாலன் முதல் பெயருடன்
பிறந்து நிறைந்து செய்யும் அதர்மங்கள் பொருக்க முடியவில்லையே
மலைகள் கடல்கள் கொடும் விலங்குகளும் பெருமபாரமல்ல இவரைச்
சுமந்து நொந்தேன் நாதா! திருவுள்ளம் இரங்காதா நாதா

பைரவி: என்று புலம்பப் பரந்தாமன்—"தேவி நீ
அஞ்சல்" என்றபயந்தந்தான்
"மதுரையில் தேவகி மைந்தனாய்த் தோன்றியுன்
துன்பம் துடைப்பேன்" என்றான்.

சங்கராபரணம்
தானே அலங்காரத்தேர் செலுத்தினால்—கம்ஸன் (தானே)
தங்கையின் மணக் கோலாகல பவனியில் (தானே)

பந்துவராளி: பட்ட பாடு போதுமே—தம்பியாய் வந்து (பட்ட)
அன்னையின் சொல்லால்
சுட்ட வடு இன்னும் ஆறவில்லையே!"

மோஹனம்: வாசுதேவன் அவதரித்தான்—மணிவண்ணன்
கண்ணன் தேவகி மைந்தனாய் (வாசு)
வானவர் மலர் மழை பொழிய தேவகி வசுதேவர் வெந்துயரழிய
ஆனந்தக் கண்ணீர்வழிய—நள்ளிரவு [அருவிபோல்
வேளையிலே-சிறைச்சாலையிலே-பர (வாசுதேவன்
நான்கு கைகளுடன் ஜகன் மோஹனாகார நாராயணன்—ஸனகாதி
நால்வரும் காணரும் விச்வரூப தர்சனந் தந்தருளித் தந்தையே எனெ

ஸ்ரீராகம்:
நந்த கோபன் மனையில் கொண்டு இக்கணமே சேர்த்தங்கு பிறந்த
குழந்தையுடன் திரும்பவாரு'' மென்றான்.

ஆனந்தபைரவி: நந்த கோபன் அரண்மனையினுள்ளே
யசோதை யருகிலே மாதவ மைந்தனை
இன்ப துன்பங் கலந்த ஆனந்தக்
கண்ணீர்ப் பெருக்குடன் விடுத்தான்—மாயப்பெண்ணை
அன்புடன் வாரி யெடுத்தான்—திரும்ப நடை தொடுத்தான்,
சிறையில் உருகும் தேவி கரத்தில் கொடுத்தான்.

## சிறையில் வேலைக்காரியின் பாட்டு

ராகம் : ஹிந்துஸ்தான காபி மெட்டு தாளம் : ஆதி

பணக்காரர் பகட்டெல்லாம்—ஏழைகளாலே
முதலாளிகள் மிகைக்கும்—தொழிலாளர்களாலே
நாம் பால் குடிப்பது மாடுமேய்க்கும்—இடயர்களாலே
நாம்—கால் சுடாமல் நடப்பதும—சக்கிலியர்களாலே
வீட்டைச் சுற்றி மணப்ப தேழைத்—தோட்டிகளாலே
வெள்ளை—வேட்டிப் பெருமையும் சலவை தீட்டுவராலே (பண)
வயிற்றுப்பசிக்கு உணவும் உழைக்கும் உழவர்களாலே
மச்சு வீட்டுக்கும் அழகு தடைப்பம விளக்குவதாலே (பணக்காரர்)

## யசோதாவின் அறையில் கோபிகள் செய்யும் முறையீடு

ராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

என்னடி அநியாயமிது?—அடியசோதா — என்னடி)
எந்நாளும் இந்தத் தொல்லையா எனென்று கேட்பதில்லையா (என்ன)

பொன்னுரியிலே இருக்கும் வெண்ணெய் தயிர் பால்திருடித்
தின்னுவதல்லாமல் என்மேல் அண்ணியிடம் கோளுரைப்பான் (என்

## தெம்மாங்கு

வந்தபொழு தெல்லாம் ரெண்டு பந்தளவு வெண்ணெய் கையில்
தந்தால் விடுவேனென்று—அடியசோதா முந்தாணியைப் பிடிப்பான்

கண்ணுக்கிது நல்லதென்று காரமையைத் தீட்டிவிட்டான்
புண்ணுப் புரண்டல்லவோ புழுவாய் துடிதுடித்தேன் (என்ன)

பாங்குறும் ...வளுக்கென்ன பல்வரிசை—யில்லையோடி
தேங்காய்த் திருவுதற்குத் தேவையென்று கேட்டிவோன் (என்ன)

கோபி தேம்மாங்கு—(பிலகரி சாயல்) தாளம்-சாபு

கையைப்பிடித்தான்—கதைபடித்தான் ஏதோ
காதில் சொல்லுவதாய் முத்தமிட்டான்
பைய அணைத்தான்—பதறி நின்றேன்—கண்டு
பாவம் பழியை என்மீது வைத்தான்—இவன்
பையனல்ல—இளந்தையலர்க்குப் பெரும்
மையல் விளைத்திடும் மாயனடி

கோபி. நாதநாமக்ரியை தாளம்-திஸ்ரம்

என்ன பொடி போட்டானோடி தெரியலையே எங்கிட்டெமவ
ஒண்ணுஞ் சொல்ல மாட்டேங்குரு
எந்த நேரம் பார்த்தாலுமுன்—மவனை நினைச்சிகிட்டு
கிருஷ்ணு கோபாலா முரளீதரா
மந்திரம் செவிக்கிருடி இந்த வினைக்கென்ன செய்வேன்
வந்து விளையாடச் சொல்லடி—தின்னுறு கொஞ்சம்
மந்திரிச்சிப் போடச் சொல்லடி

கோபி. தேம்மாங்கு தாளம்—ஆதி

எல்லாரும் சொன்னுப் போலே நானும் சொல்லப் போறதில்லே
சொல்லாமே இருப்பமுன்னு தொந்தரவு பொறுக்குதில்லே போமா
இந்த துறு துறுத்த பிள்ளையைப் பெறலாமா [மா
மோரைக் கடைஞ்சி வெண்ணெய் யெடுத்ததை
மூணு வேளைக்குண்ணு வச்சிருந்தேன்
காரக்கடலை முறுக்கு வடையைக் கவித்திருந்தேன் ஒரு கூடையிலே
இவன் ஊருப்பசங்களைக் கூட்டிக்கிட்டு வந்து
வூட்டுக்குள்ளே தாளம் போட்டுக்கிட்டு காரக் கடலையைத் தின்னுப்
காந்துது காந்துது இன்னு சொல்லி [போட்டு வவுர்
மோரைக் குடிச்சான்—வெண்ணெயைத் தின்னுன்
முறுக்கு வடையை நொறுக்கி வச்சான்
முடுக்கிணு கையில் கெடைக்கிருன்—அடேயப்பா
இடுப்பிலே எட்டி மிதிக்கிருன்
ஆனாலும் செய்யறதெல்லாம் அக்கிருமம்—அக்கிருமம்
தேனு யினிச்சாலுமே—திருடித் திங்கக் கூடாதடி அம்மா—அவன்
திருதிருன்னு முளிச்சிடுவான்—சும்மா

கோபி தேம்மாங்கு

மாயக்காரனடி கிருஷ்ணன்—மகிமைக் காரனடி
ஆயர் பாடிக்குள்ளே உன் மகன் யாருக்கும் அடங்கமாட்டான்

பாக்கு மரத்தடியே கிருஷ்ணன் பந்துகளாடையிலே
வாக்குவாதம் பேசி பாலை வச்சிப் போடி என்றான்
சின்னபிள்ளை தாண்டி—யாரையும் சிரித்து மயக்குவாண்டி
என்ன சொன்னபோதும்—உனக்கு எற்குமோ யசோதா (மாய)

ராகம்: ஜோன்புரி ராதா-கிருஷ்ண தாளம்......ஆதி

ராதா: உள்ளமெல்லாம் இன்ப வெள்ளம் நிறைந்தோட
ஊதும் குழல் நாதமே-கண்ணா-உள்ள
தெள்ளமுதும் பாலும் தேனும் நல்ல தீங்கனியும் பாகுதானும்
அள்ளி அள்ளிப் பருகினாலும் இந்த
ஆனந்தம் வராது கண்ணா

கிருஷ்: ஆனந்த நாத சங்கீதம் பரமாத்மசுகம் அன்றோ ராதா
கானரஸ இன்பக்காற்றால்-கருங்கல்லும் கரையுமடி ராதா

ராதா: நீலநிலா விம்பம் போலே முக நேர்த்தியைக் கண்டேன்
என் கண்ணா
பால் வடியும் உந்தன் வாயில் செம்பவளமும் கண்டேன்
என் கண்ணா

கிருஷ்ணன்

பகரும் விலைக்கு வராத செம்பவளத்தைக் கண்டென்ன ராதா

ராதா : விகசிதவாய் முத்தம் நூறு தாரேன்
விண்ணானம் பேசாதே கண்ணா

கிருஷ்ணன் : சின்னஞ் சிறு பாலன் நானே முத்தம்
இன்னதென்றே அறியேனே என்னென்னமோ சொல்லி
முன்போல் என்னை எய்க்கவந்தாயோடி ராதா?

ராதா : உன்னோடு விளையாட என்னால் முடியாது

## சம்ஸன் அரையில் ஹரிகதா காலக்ஷேபம் பஜனை

சீதா ராம பஜா—ராம சீதாபஜா
ரகுபதி ராகவ ராஜா நாம்—பதித பாவன சீதாராம்—ரகுபதி

## ராதா வீட்டில் கிருஷ்ணன் கச்சேரி

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

ராதே நீ என்னைவிட்டு போகாதேடி—காதலியே
உனை என்றும் மறவேனடி (ராதே)

அநு: என்னுக்குள்ளே எண்ணெய் போல் நிறைந்து நிற்பேன்
நீ எங்கு போனாலும் நான் உன்னை விடமாட்டேன் (ராதே)

பார்குமிடமெங்கும் நானே ஆவேன் செம்பாவையே பாடுவோம்
ஆடுவோம் கூடுவோம்—கண்ணன் —ராதே

ராகம் : உசேனி ராதையின் பாட்டு தாளம் : திஸ்ரம்

சரண: வாஸுகிப் பாம்பு தாம்பாகி மந்தர மாமலையானது மத்தாகி
மாதவனும் ஜெகன்மோகினியாகி வந்துவழங்கிடும் வானமுதம்பெற

பல்ல: கடல் சடைந்தாரே-திருப்பாற் கடல் கடைந்தாரே முன்னம்

அநுபல்லவி: அடல் பெரும் தேவர் தானவர் யாவரும் (கடல்)

ராகம்: ஸிந்து பைரவி கிருஷ்ணன் தாளம்-திஸ்ர ஏகம்

நாணம் ஏனோ அனுராதா?—இந்த வேணு (நாணம்)
கானன் என் மேல் தயவி ராதா—இந்த (நாணம்)

ரா : உம்மைக் கண்டபோ துண்டாகுதே வெட்கம்—காணுதபோது
காதல் வேதனை மற்றொருபக்கம்

கிருஷ்ணன் : ஆசை வெட்கம் அறியாது ஒரு
ஆண்பெண்ணுந்தான் தனியானபோது
வாசவன் எனை நீ வேண்டுதல் யாது?
மானே கேள் தருவேன் தவறாது (நாணம்)

ராதா : கொண்டலை நீங்கிடாமல் நாளுமே—வேய்ங்
குழல் போலே மாது நானுமே சந்ததம் வாழ்வும் எந்தனையாளவும்
தயவே புரிவாய் தாமரைச்செங்கண்ணா

கிருஷ்ணா : சரி நாணம் ஏனோ அனுராதா

## நந்தகோபனிடம் கோபர்களின் முறையீடு

எப்படிச் சகிப்பதிவன் இப்படிச் செய்தால்
இப்பவே, ஊரைவிட்டுப் புறப்படத்தயக்க—மில்லை (எப்படி)

அப்படி இப்படி யென்று ஆறுதல் சொல்லாதீர்
மகன் தப்பிதங்கள் ஊாறியும் செப்பிட மானம் போகுது (எப்படி)

கேட்டுக் கொடுக்க லைபயன் விளையாட்டைத் தடுக்க
காட்டிக் கொடுத்திடக் கையுங் களவுமாக
கூட்டி வந்தேன் செய்த சேட்டை யெல்லாம் சொல்ல (கேட்டு)

பரங்கிப் பழத்துக்குள்ளே எப்படியோ
ஒரு பச்சைப்பாம்பை வச்சி அடைச்சிட்டான்

பாவம் பழியார் சுமப்பா சொல்லுங்க
கோவம் வந்து துடிக்குதையா கொம்பேறி மீசை மேலே (பாவம்)
பைய மகளின் படுக்கை யறையில்
படுத்திருந்தான் நாங்க பார்த்து விட்டோம்
தெய்வ மிருக்க செனமிருக்க மணம் செய்த மருமகன் தானிருக்க
இந்த வையம் பழிக்க மனம் கொதிக்க
எங்க மானம் போகுதையா நந்தகோவா

கோபி (அன்னம்மாள் தாயார்)

பாலிருக்கப் பானையைக்காணோம் நந்தகோவா ஹரி ஹரி
பையிருக்கப் பாக்கைக் காணோம் நந்தகோவா ஹரி ஹரி
தோலிருக்கப் சொளையைக்காணோம் நந்தகோவா ஹரி ஹரி
சொம்பிருக்க நெய்யைக் காணோம் நந்தகோவா ஹரி ஹரி
சட்டியிருக்கத் தயிரைக் காணோம் நந்தகோவா ஹரி ஹரி
நந்தகோவா நந்தகோவா
மவளை காட்டமுடன் கூட்டிப்போனான் நந்தகோவா

கோபனும் = கோபியும்

வேடிக்கையா இது? ஊருக்குள்ளே — பெரும்
வெட்கக் கேடு மெத்த செய்துவிட்டான்
எந்தன் தாடிக்கும் பின்னல் சடைக்கும் தூங்கையிலே
தக்க முடிச்சுமே போட்டு விட்டான்
இதைக் கேட்டுக் கொடுங்கையா—நந்தகோவா
பையன் விளையாட்டைத் தடுங்கையா நந்தகோவா

ராகம்: காப்போதி] யசோதா-கிருஷ்ணன் [தாளம்-ரூபகம்

கிரு. தந்தையரே மலரடிக்குத் தனயன் வந்தனம்—
தந்தனம்— இங்ஙனம்

ராகம் காபி யசோதை தாளம் திரிபுடை

கண்ணா உனக்கிந்த காரியம் சரியல்ல
எல்லோரும் பழி சொல்லுகிறார் (கண்ணா)

ராகம்: காபி பாலகிருஷ்ணன் தாளம்-ஆதி

எந்தன் மீதிலே யார் குறை சொன்னார்
இயம்பிட வேண்டுமே தந்தையரே

ராசக்கிரீடை, கோபர்கள், கோபிகள், பாலகிருஷ்ணன்.

ராகம்: சங்கராபரணம் தாளம்-ஆதி

கண்ணன் என்ற போதெல்லாம் எண்ணங்கொண்ட காதலால்
காதினில் இன்ப வேணு கான வெள்ளம் பாயுதே (கண்ணன்)

அநு: கண்ணின் விழிப்பாவைபோலே
கனவிடைச் சாறுபோலே
கலந்துவிளையாடிடவே மயக்கம் உண்டாக்குறான்

கோபர்கள்

ஓங்கார ரூபமான ரீங்கார ஓசையிது
உலகத்தில் உலவுதடா—உயிருக்குயிராய்
உடல்களை ஆட்டுதடா.

ராகம் காபி: கோபிகளும் – கோபர்களும் தாளம் - திஸ்ரம்

ராஜ ராஜ கோபால ராஜேஸ்வரா—ஸ்ரீ (ராஜ
ராதா கிருஷ்ண வாரும் முரளீதரா

கிருஷ்ணன் : வாச மலர்ச்செண்டுகளாலே—மேனி மேலே
வீசி வீசி ஓடி ஆடலாம் வாரீரோ

கோபிகள் : ஆசை மதன அதற்கு யோசனை ஏனோ
அல்லாதெதெனபோமோ எல்லோரும் வாரும்

கிருஷ்ணன் : உங்கள் முல்லைச் சிரிப்பினிலே—எந்தன்
உள்ளத்தை நான் திறந்தேன்

கோபிகள் : உந்தன் மோகன ராகத்திலே
நாங்கள் லோகத்தையே மறந்தோம்

கிருஷ்ணனும்-கோபிகளும்

ஆனந்த மயமானது ப்ருந்தாவனம்-பர (மானந்த)
ஆணொடு பெண் காதல் வயம் ஆம் யவ்வனம் பர (மானந்த)

ராகம் : சிந்துபைரவி கோபிகள் தாளம் : திஸ்ரம்

பல்லவி : அவதாரமாக வந்தானே-நம்மை ஆளவந்தானே
ஆண்பெண்கள் யாவருக்கும் ஆசை தந்தானே - மாயன் (அவதார)

அநுபல்லவி: அழகாம் திருமகள் தான்-வளர் ஆயர் பாடி மேவி
ஆடு மாடு மேய்க்கிறான் அன்பாக ஆளை வைக்கிறான்
ஆனந்தத்தைகாட்டி மையல் மூட்டி அவன் அருளினாலே
ஆதாரமாக நின்று நேசங்கொண்டானே— (அவதார

சுபம்! சுபம்!! சுபம்!!!

A. D. Press Madras .21

சிறந்த நூல்! குறைந்த விலை!

# பதினாறு சினிமாக் கட்டம்.

குண்டலகேசி
விகடயோகி
வித்யாபதி
ரத்தன்
ரம்பையின்காதல்
சிவகவி
வனமோஹினி
அன்மோல்கடி
மீரா
ஹரிதாஸ்
கன்னிகா
பிரபாவதி
சகுந்தலை
பில்ஹணன்
வள்ளி
மஹாமாய
அண்ணல் மகாத்மாவின்
அமரத்வ கீதங்கள்

இப்பதினாறு புஸ்தகங்களையும் ஒன்றாக அழகிய பைண்ட் செய்யப்பெற்றது.

விலை ரூ. 1—0—0

நாம் இருவர்
ஜகதலப்பிரதாபன்
ராமதாஸ்
திருநீலகண்டர்
தெய்வநீதி
பைத்தியகாரன்
கண்ணகி
ராஜகுமாரி
சாவித்திரி
அசோக்குமார்
ஸ்ரீ முருகன்
அபிமன்யு
சந்திரலேகா
அபூர்வசிந்தாமணி
ஆர்யமாலா
வால்மீகி
காந்தி அமரஜோதி கீதம்
காந்தி மோக்ஷ தீபப்பாட்டு

இப்பதினாறு புஸ்தகங்களையும் ஒன்றாக அழகிய பைண்ட் செய்யப் பெற்றது.

விலை ரூ. 1—0—0

சொற்ப பிரதிகளே இருப்பதால் பின் இல்லையே என்று ஏமாறாமல் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள்.

கிடைக்கும் இடம்:—

**மனோன்மணி விலாச புத்தகசாலை,**
நெ. 54, பத்துரோட், கோலாலம்பூர்.